# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (04.08.2025 திங்கட்கிழமை) நண்பகல் 12 மணி அளவில், பஜார் சாலை, மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்: ஆக.7, முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாள் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.**

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
**செயலாளர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.**



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 01.08.2025 அன்று ஆறுமுகமங்கலம் கிராமம் பட்டியல் இனத்தைச் சேர்ந்த கவின் செல்வ கணேஷ் அவர்கள் ஆணவக் கொலை தொடர்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தின் தலைவர் முனைவர். நீதியரசர் ச.தமிழ்வாணன் அவர்கள் தலைமையில் துணைத் தலைவர் இமையம் (வெ.அண்ணாமலை) ஆணைய உறுப்பினர்கள் செ.செல்வக்குமார், முனைவர். சு.ஆனந்தராஜா,பொ.இளஞ்செழியன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் முன்னிலையில் காவல்துறை மற்றும் சம்பந்தப் பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு நடைபெற்றது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 165 வது நாள்!

## அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஆக. 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 165 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (03.08.2025), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 84 அ, விநாயகர் கோயில் தெரு, கொரட்டூர். 2) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.





இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே. மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி. வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால் பி.செந்தில்.வி. ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ. ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி. சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீ ப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை! காஞ்சி வடக்கு மாவட்ட

# இளைஞர் அணி - மாணவரணி - மகளிரணி - தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம்!

## கோல்டு டி.பிரகாஷ் – பிரபு – உதயா கருணாகரன் – ரவி அறிக்கை!

சென்னை,ஆக.4

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு, மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான பொது ஆலோசனை கூட்டம் 5.8.2025 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பல்லாவரம் திடலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்பு ஆலோசனை வழங்க உள்ளார்.

இந்த முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் அனைத்து அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 9.8.2025 அன்று வருகை

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அணிகளின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பேசினார். இதில் ஜி. செல்வம் எம்பி, முன்னிலை வகிக்க, ஒன்றிய செயலாளர் கோகுலக் கண்ணன் அனைவரையும் வரவேற்றார். இதில் பேரூர் செயலாளர் எழிலரசன், வசந்தா, மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சிவக்குமார், கலியுக கண்ணதாசன், ஜியாவுதீன், யுவராஜ், லட்சுமணன் உள்ளிட்ட கிளைக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# அதிகார நந்தியும் அவதார நந்தியும்

### கணையாழி தலையங்கம்




உடல் நலம் பெற்றுப்
பணிக்குத் திரும்பியிருக்கும்
முதல்வரை வாழ்த்துவோம்!

பொதுமக்கள் பயன்பெற
"நலம் காக்கும் முகாம்" போலவும்
பணிகளைச் செய்திருக்கிறான்
கங்கை கொண்ட சோழன்!

கோயில் கட்டினான்
கங்கை நீரைக் கொண்டுவந்து
தலைநகரைப் புனிதமாக்கினான்
என்பதோடு
மக்கள் நலம் பேண
மருத்துவ மனைகள்!
ஆரோக்கிய சாலைகள்
மருத்துவ மண்டபங்கள்
'வியாதிப்பட்டுக்' கிடைக்கும் நோயாளிக்கு
வைத்தியம், உணவு, தங்கும் வசதிகள்
கட்டணம் இல்லாமல் கிடைக்கச் செய்தவன்
கங்கை கொண்ட சோழன் என்றும்
கல்வெட்டுகள் சொல்கின்றன.

முதலாம் இராசேந்திர சோழனைக் காண
வந்து சென்றிருக்கிறார் பிரதமர்!
தானே கங்கை கொண்ட சோழனாகக்
கைகளில் கங்கை நீர்ச் சொம்பு!
கங்கை கொண்ட சோழ ஈசுவரருக்கு
நரேந்திர சோழரின் தீப ஆராதனை!
இராசேந்திர சோழனுக்கும்
கிடைத்திராத வாய்ப்பு!

முதலாம் இராசேந்திரனின்
இயற்பெயர் மதுராந்தகன்!
வரலாறு சொல்லும் பெயர்
கங்கை கொண்ட சோழன்!

பிரதமரைப் போல கைச் சொம்பில்
கங்கை நீரைக் கொண்டு வந்ததால்
கங்கை கொண்ட சோழன் ஆகவில்லை.

காசிக்குச் சென்று
கங்கைநீர்ச் சொம்போடு
வருகிறவர்கள் எல்லாம்
கங்கை கொண்ட சோழர்கள் இல்லை!
கங்கை வரை சென்று
வென்று வந்ததால்
கங்கை கொண்ட சோழன்!
'சலமயமான சயத்தம்பம்'
நாட்டியவன் என்று
திருவாலங்காடு செப்பேடு சொல்கிறது!
தந்தை இராசராசனும்
பெறாத வெற்றி என்பதால்
தலைநகர் பெயரே
கங்கை கொண்ட சோழபுரம்!

தஞ்சையில் இராசராசேச்சுவரம் என்றால்
தனக்குக் கங்கை கொண்ட சோழேச்சுரம்!
தான் உருவாக்கிய ஏரிக்குச்
சோழகங்கம்!

எல்லாவற்றிலும் கங்கையை
இணைத்துக் கொண்டவன்.
"கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி" என்ற
சிலப்பதிகார வரிகளைச்
செயலில் காட்டிய
கங்கை கொண்ட காவிரி நாடன்!

தந்தைக்குத் "திருமகள் போல"
மெய்க்கீர்த்தி என்றால்
தனக்குத் "திருமன்னி வளர."

"வங்க பாலர்கள்",நூலில்
ஆர்.டி.பானர்ஜி சொல்கிறார்
கங்கைப் படையெடுப்பில் சென்று
மேற்கு வங்கத்தில் தங்கிய படைத் தலைவன்
சாமந்த சேனன் மரபினர்தான்
வங்கத்தை ஆண்ட
வங்க சேன் மரபினராம்.

வங்கச் சைவ மரபுக்கும்
தமிழ்ச் சைவ மரபுக்கும்
கூட்டணியை உருவாக்கியவன்
கங்கை கொண்ட சோழனாம்!

வணிகத்தைப் பெருக்கக்
கடல் கொள்ளையைத் தடுக்கக்
கடலாண்ட காவலன்!
"பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட
கோப்பரகேசரி"ஆகியிருக்கிறான்!

சிவன் கோயில்களில் நந்தி இருக்கும்!
சாதாரண நந்தி
பெரிய நந்தி
கைலாச நந்தி
அதிகார நந்தி
அவதார நந்தி என்று
ஏதாவதொரு நந்தி
எல்லாச் சிவன் கோயில்களிலும் இருக்கும்!

கங்கைகொண்ட சோழேச்சுரத்தில்
இருப்பது அதிகார நந்தி!

ஆயுதம் எடுக்காமல் நடத்துகிற
வணிகப் போரில்
இப்போது பல நாடுகளையும்
மிரட்டிக் கொண்டிருக்கிறது
ஓர் அதிகார நந்தி!

நான் சொன்னால் போர்!
நிறுத்தச் சொன்னால் சமாதானம்!
இல்லையென்றால் அபராதம்!

கட்டைப் பஞ்சாயத்து நிலையில்
உலக அரசியல்!
வல்லரசு என்றால்
நல்லரசாக இருக்க வேண்டாமா?

உலகுக்கே
ஜனநாயக வகுப்பு எடுக்கிறவர்கள்
முன்மாதியாக இருக்க வேண்டாமா?
ஜனநாயகம் என்பது
பெரும்பான்மை மக்களுக்கானது
என்பதில்லை
சிறுபான்மை மக்களுக்குமானது என்பதை
உணர்த்த வேண்டாமா?
இப்படியெல்லாம்
கற்றுக்கொள்ள நிறையவே இருக்கின்றன
கங்கை கொண்ட சோழனிடம்!

கங்கை கொண்ட சோழனுக்குக்
கப்பல் படை இருந்தது!
ஆனாலும்
சீனாவுக்குத் தூதுக்குழு அனுப்பி
நட்புடன் இருந்ததற்கான
சான்றுகளாகத் தஞ்சையில்
2165 சீனக் காசுகள்!

கங்கை கொண்ட சோழனிடம்
யானைப் படை இருந்தது!
ஆனாலும்
கங்கை கொண்ட சோழபுரத்தில்
சிவனுக்குக் கோயில்!
எண்ணாயிரத்தில்
சுந்தர சோழ ஆழ்வார் கோயில்!
ஈழத்தில் இராசேந்திர சோழப்
பெரும்பள்ளி!
நாகப்பட்டினத்தில் புத்த விகாரைக்குப்
பள்ளிச் சந்தம் உறுதி! என்று
மத நல்லிணக்கத்துக்கும்
முன்மாதிரியாக இருந்திருக்கிறான்!

அதிகார நந்தியும்
அவதார நந்தியுமாக
உலகம்
அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில்
இப்போதும்
கற்றுக்கொள்ள நிறையவே
இருக்கின்றன
கங்கை கொண்ட சோழனிடம்!



அன்புடன்
**ம.ரா.**

நன்றி : **கணையாழி**
**ஆகஸ்ட் - 2025**